2006 ஆகஸ்ட் 31]

130—

தொழிற்சாலை

***1—திரு. துரை சந்திரசேகரன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், புதுக்குடி கிராமத்தில் புதிய பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் பால் உற்பத்தி முழுவதும் சென்னை மாநகர விற்பனைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது. ஆகையால், தஞ்சை மாவட்டம், புதுக்குடி கிராமத்தில் பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996–2001 ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்தில் தஞ்சை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம் புதுக்குடி கிராமத்தில் பால் பண்ணை அமைக்க மத்திய அரசிடமிருந்து நிதி பெற முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. மறுபரிசீலனை செய்து இத்திட்டத்தை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் உள்ள பால் பண்ணையை புதிய பொலிவுடன் மேம்படுத்தி பன்னாட்டு தரச் சான்று பெறத்தக்க வகையில் உயர்த்திட திட்டம் தயாரிக்கப்பட்டு தீவிர பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 100 சதவிகித மானியமாக 8.59 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது தஞ்சை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம் உற்பத்தியாகும் பால் முழுவதும் கொள்முதல் செய்யப்பட்டு, சென்னை மாநகர

விற்பனைக்காக எடுத்துக்கொள்ளப்படுவதால், உபரியாக பால் இல்லாத நிலை உள்ளது. ஆகையால், புதுக்குடியில் தனியாக, புதிதாக பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், தஞ்சை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்குச் சொந்தமாக புதுக்குடியில் உள்ள நிலத்தில் உயர் இரக கலப்பின பொலிக் காளைகள் மற்றும் எருமையின பொலிக் காளைக்ள் பண்ணை அமைக்கத் தேவையான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பொலிக் காளைகள் பண்ணைமூலம் தமிழகத்திலுள்ள அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களிலுள்ள பால் உற்பத்தியாளர்களின் பசு மற்றும் எருமையின அபிவிருத்திக்குத் தேவையான உயர் இரக பொலிக் காளைகள் விந்து அதிக அளவில் தயார் செய்து வழங்க வாய்ப்புள்ளது. மேலும், புதுக்குடியில் உள்ள 15 ஏக்கர் நிலத்தை சீர் செய்து, உயர் இரக வீரிய பசும்புல் பண்ணை அமைக்கத் தேவையான பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் பண்ணையில் உற்பத்தியாகும் பசும்புல் தஞ்சை மாவட்ட பால் உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க வாய்ப்புள்ளது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) தமிழ்நாடு நகரமைப்புச் சட்டப் பிரிவு உயர் நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போனஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய சிறப்பான அனுமதியின்மூலம் ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து நம்முடைய அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். தமிழ்நாடு நகரமைப்பு திருத்தச் சட்டம் பிரிவு 113 (a), சென்னை உயர் நீதிமன்றத்தால் 23-8-2006 ஆம் தேதி அன்று இரத்து செய்யப்பட்டது. அதாவது, விதிமுறை மீறி சென்னையிலும், அதன் சுற்று வட்டாரங்களிலும் கட்டப்பட்ட